# இயேசு ஊழியங்கள்

**105/229, எம்.டி.எச் சாலை, வில்லிவாக்கம், சென்னை – 600 049**

**போன்: 9003009752**

ஈமெயில்: **beten.vatsar@angeltv.org** இணையகளம்: **www.iesusministries.org**


கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு மகளே,

எம்பெருமானாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது அன்பான வாழ்த்துக்கள். தேவன் உங்கள் மீது அளவில்லாத அன்பு கொண்டுள்ளார். அவருடைய அன்பினால் உங்களை நிறைத்து ஆற்றித்தேற்றி உங்களைப் பெலப்படுத்தி நடத்துவார். எனது அன்பு மகளே, இன்றைக்கு பலவித பயத்தோடும் கலக்கத்தோடும் நீங்கள் இந்த கடிதத்தை வாசித்துக்கொண்டு இருக்கலாம். உங்களை நன்றாக அறிந்த புரிந்த உங்கள் பரலோக தகப்பன் உங்களோடு பேசும் வார்த்தையை வாசித்துப்பாருங்கள்.

> **அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல ( I யோவான் 4:18).**

இந்த வார்த்தைகளை நீங்கள் வாசிக்கும்போதே உங்களில் தேவ அன்பு நிரம்பி வழிவதை நீங்கள் உணரமுடியும். அவருடைய அன்பு உங்களில் பொங்கிப் பொங்கி வழியட்டும். அதில் எந்த பயத்துக்கும் இடமில்லை. தேவனுடைய பூரண அன்பு உங்களுக்குள் இருக்கும்போது எதைக்குறித்தும் கவலைப்படாமல் தைரியமாய் இருங்கள். அவருடைய அன்பு, பயத்தினால் உண்டாகும் மனவேதனையை இப்பொழுதே உங்களை விட்டு நீக்கிப்போடும். அவருடைய தூய அன்புக்குள் உங்களை மறைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு குழந்தை பிறக்காது என்று சொன்னவர்கள் மத்தியில் உங்களை பிள்ளைத்தாச்சியாக மாற்றப்போகிறார். உங்கள் கண்களில் வடிந்துகொண்டிருக்கும் கண்ணீரைத் துடைத்துக்கொள்ளுங்கள்.

இப்பொழுது நான் உங்களுக்காக ஜெபிக்கப்போகிறேன். அன்பு மகளே, நீங்களும் என்னோடு இணைந்து கொள்ளுங்கள். மகா கிருபையும் அன்பும் நிறைந்த அன்பின் நல்ல பிதாவே, உம்முடைய தூய அன்பினால் அன்பு மகளை இப்பொழுதே நிரப்பும். மகளுக்குள் இருக்கும் எல்லாப் பயங்களும் இப்பொழுதே மறைந்து போகட்டும். வேதனைகள் எல்லாம் மாறட்டும். உம்முடைய அன்பு இவர்களைத் தைரியப்படுத்தட்டும். உம்முடைய வல்லமையினால் இவர்களுக்கு இப்பொழுதே குழந்தை பாக்கியத்தைக்கொடுத்து ஆசீர்வதியும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் அன்பின் பரலோகப் பிதாவே, ஆமென்.

என் அன்பு மகளே, தைரியமாயிருங்கள். கர்த்தர் நிச்சயமாக உங்கள் கர்ப்பத்தை ஆசீர்வதித்து உங்கள் துக்க நாட்களை முடிந்துபோகப்பண்ணுவார். அவர் மேல் விசுவாசமாய் இருங்கள். *நீங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளை மறக்காமல் எங்களோடு பகிர்ந்துகொள்ளும்படி மிகுந்த அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறோம். மேலும் ஜெப உதவிக்கு எங்களோடு தொடர்புகொள்ள* - 9003009752

அன்புடன்

சாது சுந்தர் செல்வராஜ்

*குறிப்பு: உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கு ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.*